(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 3.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2015 செத்தெம்பர் 22, செவ்வாய்க்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு

---

## பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

### சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்கள்

1.

நிதி அமைச்சர்,— உண்ணாட்டரசிறை (திருத்தம்),— 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

2.

நிதி அமைச்சர்,— சேர்பெறுமதி வரி (திருத்தம்),— 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர் பெறுமதி வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

3.

நிதி அமைச்சர்,— நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தம்),— 2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

4.

நிதி அமைச்சர்,— நிதி,— மதுச்சாலைகள் மற்றும் தவறணைகள் அறவீடு, சீட்டாட்டத் தொழில் அறவீடு, அதிஈட்ட வரி, செல்லிடத் தொலைபேசி தொழிற்படுத்துநர் அறவீடு, வீட்டுக்கு நேரடி செய்மதிச் சேவைகள் அறவீடு, செய்மதி அமைவிட அறவீடு, அர்ப்பணிக்கப்பட்ட விளையாட்டு அலைவரிசை அறவீடு, மாளிகை வரி, குடியகல்வு வரி அத்துடன் மோட்டார் வாகன இறக்குமதியாளர்கள் உரிமக்கட்டணத்தை விதிப்பதற்கு ஏற்பாடுசெய்வதற்கும் அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட மற்றும் அதன் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

5.

நிதி அமைச்சர்,— பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தம்),— 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்

6.

நிதி அமைச்சர்,— தொலைத் தொடர்பு அறவீட்டுத் (திருத்தம்),— 2011ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க, தொலைத்தொடர்பு அறவீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

7.

நிதி அமைச்சர்,— பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தம்),— 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1 ஆம் இலக்க பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 23 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், 2015 செத்தெம்பர் மாதம் 23 ஆம் திகதி புதன்கிழமை சபை அமர்வு நேரம் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 6.30 மணி வரை இருக்குமாக. பி.ப. 6.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

3.

பராளுமன்றச் சபை முதல்வர்,— தெரிவுக்குழு (இல. 1),— 121 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், நடப்புக் கூட்டத்தொடரின் சேவைக்கான தெரிவுக்குழு சபாநாயகரின் தலைமையிலும் அரசியற் கட்சிகளின் தலைவர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளாகிய பாராளுமன்றத்தினால் பெயர் குறிப்பிடப்படும் பத்தொன்பது (19) உறுப்பினர்களைக் கொண்டும் அமைந்திருத்தல் வேண்டும்.

4.

பராளுமன்றச் சபை முதல்வர்,— தெரிவுக்குழு (இல.2),— இன்றைய தினம் பாராளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையின் பிரகாரம் நடப்புக் கூட்டத்தொடரின் போது இத்தெரிவுக் குழுவில் தவிசாளராக சபாநாயகரும், பின்வரும் பத்தொன்பது (19) உறுப்பினர்களும் சேவையாற்றுவார்களாக :—

கௌரவ ஜோன் அமரதுங்க

கௌரவ நிமல் சிறிபால த சில்வா

கௌரவ ரஊப் ஹகீம்

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல

கௌரவ மஹிந்த சமரசிங்ஹ

கௌரவ ரவி கருணாநாயக்க

கௌரவ றிஸாட் பதியுதீன்

கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க

கௌரவ துமிந்த திசாநாயக்க

கௌரவ கபீர் ஹஷீம்

கௌரவ (கலாநிதி) விஜயதாஸ ராஜபக்ஷ

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ மனோ கணேசன்

கௌரவ தினேஷ் குணவர்தன

கௌரவ டக்ளஸ் தேவானந்தா

கௌரவ விஜித ஹேரத்

கௌரவ மாவை சோ. சேனாதிராசா

கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவர்,— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழான தீர்மானம்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 41அ உறுப்புரையின் (1) ஆம் துணை உறுப்புரையின் (உ) உப பந்தி மற்றும் (4) மற்றும் (5) ஆம் பந்திகள் ஆகியவற்றின் கீழ் அரசியலமைப்புப் பேரவைக்கு பிரதம அமைச்சர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகிய இருவரினாலும் பெயர் குறித்து நியமிக்கப்படுதலின் பேரில், பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லாத பின்வரும் மூன்று நபர்களை பெயர் குறிப்பிடுவதானது, அரசியலமைப்பின் 41அ உறுப்புரையின் (5) ஆம் பந்தியின் கீழ் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது :—

1. கலாநிதி (திரு) அஹங்கமகே டியூடர் ஆரியரத்தின
2. ஜனாப் சிப்லி அஸீஸ்
3. கலாநிதி (செல்வி) ராதிகா குமாரசுவாமி

**** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.***